**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

TNTV06-000061/2018

**அசல் வழக்கு எண்.47/2018**

சித்ரா (அவருக்காக அவரது அதிகாரம் பெற்ற பிரபுதாஸ்
இ.ம.எண்.108/2021 உத்தரவுப்படி நீக்கம் செய்யப்பட்டுள்ளது) .... வாதி

**// எதிர் //**

1. தனபாக்கியம் (இறந்தவர்)
2. தனலெட்சுமி (Ex Parte)
3. பன்னீர்செல்வம் (Ex Parte)
   (இடைநிலை மனு எண்.45/2025 ல் 29.01.2025 உத்தரவுப்படி
   3 வது எதிர்வாதி அசல் வழக்கிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது)
4. சார்பதிவாளர், மன்னார்குடி.
5. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், திருவாரூர்.
   (இடைநிலை மனு எண்.107/2021 ல் 24.03.2021 உத்தரவுப்படி
   அசல் வழக்கிலிருந்து 4 வது மற்றும் 5 வது எதிர்வாதிகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது)

.... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலையாக்கம் செய்யப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார். 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்த

பின்னர் வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் 4, 5 பிரதிவாதிகளை நீக்கரவு செய்ய கோரியதன் அடிப்படையில் நீக்கப்பட்டும், 2ம் பிரதிவாதிக்கு தினசரி நாளிதழ் மூலம் தகவல் தெரிவித்தும் 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

## தீர்ப்புரை

1ம் பிரதிவாதி பெயரில் 2ம் பிரதிவாதியால் (இ.ம.எண்.108/2021 உத்தரவுப்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது). 21.08.2017 தேதியில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and Void) என்று விளம்புகை செய்தும், 2ம் பிரதிவாதியோ அவரது அதிகாரம் பெற்ற நபர்களோ சட்டப்படியான நீதிமன்ற நடவடிக்கை இல்லாமல் வேறு எந்த வகையிலும் வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தை தடை செய்யவோ சட்ட முரணாக வெளியேற்றவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் வழக்கு செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வாதி தரப்பு திருத்தப்பட்ட வழக்குரைச் சுருக்கம் :-

**2.1.** வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது. மேற்படி வழக்கு சொத்து மன்னார்குடி வட்டம் மன்னார்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட கோப்பிரளயம் வருவாய் கிராமம், பூக்கொல்லை தெருவில் உள்ளது. வாதி வழக்கு சொத்தில் ஒரு கூரை கொட்டகை கட்டப்பட்டு வேலி அடைப்புடன் அனுபவம் செய்யப்பட்டு வருகிறது. வழக்கு சொத்துக்கு வாதி பெயரில் நகராட்சி சொத்து வரி மற்றும் மின் இணைப்பு உள்ளது. வழக்கு சொத்து

நாளது தேதி வரையில் வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. வாதியின் சொத்துரிமை மற்றும் அனுபவத்தை அனுசரித்து கிராம நிர்வாக அலுவலரால் சான்று வழங்கப்பட்டுள்ளது.

**2.2.** வழக்கு சொத்து மேலத்திருப்பாலக்குடி கிராமத்தை சேர்ந்த ராமதாஸ் மனைவி தமிழரசி என்பவரால் கடந்த 15.03.1988 ல் இரண்டு கிரய ஆவணங்கள் மூலமாக கிரயம் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி கிரய ஆவணங்கள் மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.409/1988 மற்றும் கிரய ஆவண எண்.1313/1988 என்று பதிவாகி உள்ளது.

**2.3.** மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியான தனபாக்கியம் என்பவர் ராமதாஸ் என்பவரின் உடன் பிறந்த சகோதரி ஆவார். ராமதாஸ் என்பவரின் முதல் மனைவி சாரதாம்பாள் என்பவர் மேலே கண்ட மேலத்திருப்பாலக்குடி கிராமத்தில் வசித்து வருகிறார். சாரதாம்பாள் மகன் சத்தியசீலன் என்பவர் வழக்கின் வாதி சித்ராவின் கணவர் ஆவார். 1ம் பிரதிவாதி தனபாக்கியத்திற்கு தனலெட்சுமி மற்றும் தமிழரசி என்ற இரண்டு மகள்கள். அவர்களில் தனலெட்சுமி என்பவர் 2ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதியின் மகள்களான 2ம் பிரதிவாதி தனலெட்சுமி மற்றும் தமிழரசி ஆகிய இருவரையும் ராமதாஸ் திருமணம் செய்து கொண்டார். ராமதாஸ் - தனலெட்சுமி - தமிழரசி இவர்களுக்கு குழந்தைகள் ஏற்படவில்லை. ராமதாஸ் மலேசியா சென்று இருந்த காலத்தில் கடந்த 1998ம் வருடத்தில் மலேசியாவிலேயே இறந்துவிட்டார். ராமதாஸ் மலேசியா சென்ற பின்னர் 2ம் பிரதிவாதி தனலெட்சுமி தமிழ்வாணன் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

**2.4.** மேற்படி தமிழரசி சில காலம் மேலத்திருப்பாலக்குடியில் வசித்து வந்தார். பிறகு நீடாமங்கலம் தாலுக்கா, மரக்கடை அவ்வைக்காலனியில் வசித்து வந்தார். தமிழரசிக்கு குழந்தைகள் இல்லை. வாதியின் கணவர் சத்தியசீலனுக்கு மேற்படி தமிழரசி சின்னம்மாள்

என்பதால் தமிழரசி சத்தியசீலனின் பராமரிப்பில் இருந்து வந்துள்ளார். தமிழரசி உயிரோடு இருந்து வந்த காலத்தில் தமிழரசிக்கு சொந்தமான வழக்கு சொத்தை சத்தியசீலன் அடைந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தின்படி சத்தியசீலன் பெயரில் கடந்த 09.01.2004 ம் வருடத்தில் தக்க சாட்சிகள் முன்னிலையில் உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார். தமிழரசி கடந்த 07.02.2014 ம் தேதியில் இறந்து விட்டார். தமிழரசி இறப்புக்கு பிறகு அவரால் எழுதி வைக்கப்பட்டு மேற்படி உயில் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 11.03.2014 ம் தேதியில் வழக்கு சொத்தை பொருத்து சத்தியசீலன் அவரது மனைவிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மன்னார்குடி சார்பதிவ ஆவண எண்.926/2014 என்று பதிவு செய்யப்பட்டு நாளது தேதி வரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வழக்கு சொத்து வாதிக்கு கிடைத்து வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்தை பொருத்து வாதி சட்டப்படியான உரிமை மூலம் மற்றும் அனுபவதாரர் ஆவார்.

**2.5.** கடந்த 24.01.2018 ம் தேதி 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் சட்ட முரணாக அத்துமீறி பிரவேசித்து வாதியின் அனுபவத்தை தடை செய்யவும் வழக்கு சொத்தில் வாதியால் வைக்கப்பட்டுள்ள கம்பி வேலியை அப்புறப்படுத்தவும் முயற்சி செய்துள்ளார்கள். வாதி அவருக்கு வேண்டியவர் உதவியோடு அவர்களை தடுத்து நிறுத்தி அப்புறப்படுத்திவிட்டார். 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் அவர்களுக்கு பாத்தியம் இருப்பதாகவும் அதற்காக அவர்கள் வசம் பத்திரம் இருப்பதாகவும் வழக்கு சொத்தை எப்படியும் கைப்பற்றிக்கொள்வோம் என்று சொல்லி வாதியை மிரட்டி சென்றுள்ளார்கள். அதனால் சந்தேகம் அடைந்த வாதி வழக்கு சொத்தின் வில்லங்க சான்று வாங்கி

பார்த்தபோது 07.02.2014 ம் தேதியில் இறந்துபோன தமிழரசி பெயரில் 2 வது பிரதிவாதி ஆள் மாறாட்டம் செய்து 1ம் பிரதிவாதி பெயரில் 2ம் பிரதிவாதிக்கு 21.08.2017 ம் தேதியில் ஒரு மோசடியான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளதும் மேற்படி ஆவணம் மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 என்று பதிவாகி இருப்பதும் மேற்படி மோசடியான செயலுக்கு 4 ம் பிரதிவாதியும் குற்ற உடந்தையாக இருந்து வந்ததும் வாதிக்கு தெரிய வந்துள்ளது.

**2.6.** 2 ம் பிரதிவாதி தனலெட்சுமியின் உண்மையான வாக்காளர் அடையாள அட்டை எண்.LNN 3677101 நாள் 30.01.2018, ஆனால் தமிழரசி பெயரில் 2ம் பிரதிவாதி தனலெட்சுமியால் தயார் செய்யப்பட்டுள்ள தமிழரசியின் வாக்காளர் அடையாள அட்டை TN/30/178/0285691 நாள் 22.01.1998. எனவே இறந்துபோன தமிழரசி பெயரில் மோசடியான மற்றும் பொய்யான வாக்காளர் அடையாள அட்டையை தயார் செய்து அதன் மூலம் ஆள்மாறாட்டம் செய்து 1ம் பிரதிவாதி பெயரில் 2ம் பிரதிவாதியால் ஒரு மோசடியான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி மோசடியான ஆவணம் தொடர்பாக 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் உள்ளிட்ட தொடர்புடைய நபர்கள் மீது குற்ற வழக்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு வாதி 27.02.2018 ம் தேதியில் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் மேற்படி பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இருந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் மீண்டும் 07.04.2018 ம் தேதியில் காவல் துறை கண்காணிப்பாளருக்கு வாதியால் ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மேற்படி பிரதிவாதிகள் மீது குற்ற வழக்கு பதிவு செய்ய கேட்டு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் மூலமாக வாதி நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளார்.

**2.7.** வழக்கு சொத்தை பொருத்து 2ம் பிரதிவாதியால் 1ம் பிரதிவாதி பெயரில் 21.08.2017 ம் தேதியில் மோசடியாக எழுதி வைக்கப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வழக்கு சொத்தை பொருத்து ஏற்கனவே வாதி பெயரில் 11.03.2014 ம் தேதியில் ஏற்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.926/2014 செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி வழக்கு சொத்து சட்டப்படி வாதிக்கு உரிமையுள்ள சொத்தாகும். தற்போது 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள மேலே கண்ட மோசடியான செட்டில்மெண்ட் ஆவணத்தை ஆதாரமாக கொண்டு வழக்கு சொத்திலிருந்து வாதியை 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் சட்டமுரணாக வெளியேற்றவும் வாதியின் அனுபவத்தை தடை செய்யவும் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள்.

**2.8.** எனவே 1ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை செய்தும், 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை தடை செய்ய கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம் :-**

**3.1.** வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டியுள்ளது. அதனை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார்.

**3.2.** பிரதிவாதியால் வழக்கு சொத்து 15.03.1988 ல் ராமதாஸ் மனைவி தமிழரசி என்பவரால் கிரயம் பெறப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. தமிழரசி மலேசியாவில் வசித்து வருகிறார். நாளது தேதி வரை தமிழரசி உயிருடன் இருந்து வரும் நிலையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படி நிலை நிற்ககூடியது அல்ல.

**3.3.** வழக்கு சொத்தைப் பொறுத்து சத்தியசீலன் பெயரில் தமிழரசி கடந்த 09.01.2004 ம் தேதியில் ஓர் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். தமிழரசி இறப்பிற்கு பிறகு உயில் நடைமுறைக்கு வந்துள்ளது. வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டியுள்ளது. அதனை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். தமிழரசி மலேசியாவில் நாளது தேதி வரை உயிருடன் உள்ள நிலையில் தமிழரசி இறந்ததாக சொல்லியுள்ளது வன்மையாக மறுக்கப்படுகிறது. தமிழரசி உயிருடன் இருக்கும் நிலையில் 11.03.2014 ம் தேதியில் சத்தியசீலன் அவரது மனைவிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் சொத்து வரி, மின் இணைப்பு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லியுள்ளது சரியல்ல. தமிழரசி உயிருடன் இருக்கும் நிலையில் வாதியும், சத்தியசீலனும் ஏதேனும் ஆவணங்கள் ஏற்படுத்தியிருந்தால் அது தமிழரசியின் உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல.

**3.4.** கடந்த 21.08.2017 ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் தமிழரசி வெளிநாட்டில் இருப்பதை அனுகூலமாக எடுத்துக் கொண்டு ஆள் மாறாட்டம் செய்து 21.08.2017 ம் தேதியில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ள விபரம் தற்பொழுதுதான் தெரிய வந்துள்ளதுள்ளது அது மோசடியானது.

**3.5.** தமிழரசியின் கணவர் பிரதிவாதியின் மாமா ஆவார். அந்த வகையில் தமிழரசியை பிரதிவாதிக்கு நன்கு தெரியும். தமிழரசி மலேசியாவிலிருந்து பிரதிவாதிக்கு பல்வேறு

கடிதங்கள் எழுதி அதன் வாயிலாக தாவா சொத்துக்களை பாதுகாத்து வருகிறார். 2ம் பிரதிவாதி தனலெட்சுமி தன்னை தமிழரசி என்று தெரிவித்துக் கொண்டு மன்னார்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு கொடுத்து உத்தரவு பெற்றுள்ளார். அதில் தவறான தகவல்களை கொடுத்து உத்தரவு பெறப்பட்டுள்ளது. மேற்படி மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு பெறப்பட்டுள்ளது. அது குறித்து அதில் சம்மந்தப்பட்ட அனைத்து நபர்கள் மீதும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கும் உரிமையையும் பிரதிவாதி தக்கவைத்துக்கொள்கிறார்.

**3.6.** 2ம் பிரதிவாதி தனலெட்சுமி தமிழரசி மலேசியாவில் இருப்பதை அவருக்கு அனுகூலமாக எடுத்துக்கொண்டு நீதிமன்றத்தினையே பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து தனலெட்சுமி தமிழரசியாக மனு கொடுத்திருப்பதும் பிரதிவாதிக்கு தற்பொழுதுதான் தெரிய வந்துள்ளது. மேற்படி தனலெட்சுமி தமிழரசி ஆகிய இருவரையும் பிரதிவாதிக்கு நன்கு தெரியும்.

**3.7.** பிரதிவாதி தனலெட்சுமிக்கு எதிராக தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்து அதில் தனலெட்சுமிக்காக வழக்கறிஞர் ஆஜராகி கட்சி நடத்தியுள்ள நிலையிலும் மேற்படி வழக்கறிஞரை அழைத்து விசாரித்தாலே தனலெட்சுமியின் மோசடி செய்கைகள் நீதிமன்றத்திற்கு தெள்ளத்தெளிவாக தெரிய வரும். அவற்றை எல்லாம் முற்றிலும் மறைத்து தற்பொழுது பொய்யான விபரங்களை கூறி தனலெட்சுமி அவரை தமிழரசி என்று தவறாக மனுகொடுத்திருப்பது என்பது நீதிமன்றத்தை ஏமாற்றி உத்தரவு பெற முயற்சி செய்யும் துணிவு கொண்ட நிலை உள்ளவராக உள்ளார் என்பதை பிரதிவாதி அவரது தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலமாக தனலெட்சுமியின் மோசடி செய்கைகளை நரூபிக்க தயாராக உள்ளார்.

**3.8.** தனலெட்சுமி தன்னை தமிழரசி என்று நிரூபித்து தாவா சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஆதார் அட்டை போன்ற அரசாங்க ஆவணங்களை மோசடியாக பெற்றுள்ள விபரம் தகுந்த சாட்சியங்கள் மூலமாக பிரதிவாதி நிரூபணம் செய்ய தயாராக உள்ளார். மேற்படி மோசடியான ஆவணத்தை தாக்கல் செய்து அதன் அடிப்படையில் உத்தரவு பெற முயற்சிக்கும் பட்சத்தில் நீதிமன்றமே உசிதமென கருதும்பட்சத்தில் இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 195 ன்கீழ் மனுகொடுக்கும்பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க இயலும் என்ற உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புகளின்படி தனலெட்சுமி தன்னை தமிழரசி என்று நீதிமன்றத்தை அணுகியுள்ள விசயத்திலும் பிரதிவாதி நடவடிக்கை எடுக்கும் உரிமையையும் தக்கவைத்துக்கொள்கிறார்.

**3.9.** தனலெட்சுமி தன்னை தமிழரசி என்று கூறி மோசடி செய்கையில் ஈடுபட்டது சம்மந்தமாக மன்னார்குடி காவல் நிலையம் மற்றும் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் அலுவலகத்தில் விசாரணை செய்தபோது தமிழரசியிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது தனலெட்சுமியின் மோசடி செய்கைகள் காவல் துறைக்கு தெரியவந்து கண்டித்து அனுப்பியுள்ளனர். இந்நிலையில் தனலெட்சுமி அவரது மோசடி செய்கைகளை நிறுத்திக்கொள்ளாமல் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தொடர் மோசடி செய்கையில் ஈடுபட்டு வருகிறார். அது சட்டப்படி தவறானது.

**3.10.** வாதியால் சொல்லப்பட்டுள்ள வழக்கு மூலம் முற்றிலும் தவறானது. வழக்கிற்காக கற்பனையாக சொல்லப்பட்டவை. மேலும் வாதி கரைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளார். வாதி வழக்குரையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் உண்மை தன்மைகளை வாதியே நிரூபிக்க வேண்டியுள்ளது. அதனை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். ஆகவே, வாதி கோரியுள்ள யாதொரு பரிகாரமும் வாதிக்கு கிடைக்கக்

கூடியதல்ல என்ற வகையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) <u>4 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்</u> :- <u>(அதனை 5 ம் பிரதிவாதி தனதாகவும் ஏற்றுக்கொள்கிறார்)</u>**

**4.1.** வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளில் 4ம் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் சங்கதிகளை தவிர மற்றவைகளை வன்மையாக மறுப்பதால் அவைகளை வாதியே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

**4.2.** வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரத்திற்கும் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. பிரதிவாதியை பொறுத்து எவ்வித பரிகாரமும் கோராமல் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல. பிரதிவாதிகள் ஒரு அரசு அலுவலர்கள் என்பதால் அவர்களுக்கு எதிராக உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80ன்கீழ் இரண்டு மாத கால அறிவிப்பு கொடுக்காமலும், மேற்படி அறிவிப்பை டிஸ்பென்ஸ் செய்ய தனியே மனு தாக்கல் செய்யாமலும் அவ்வாறு மனு தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் குறிப்பிடாமலும் வழக்கு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல.

**4.3.** வாதி கோரியுள்ள விளம்புகை பரிகாரத்திற்கு சொத்து வாதிக்கு சொந்தமென விளம்புகை பரிகாரம் கோராமல் ஆவண எண்.3221/2017 செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியிருப்பது சட்டப்படி நிலைநிற்கதக்கதல்ல. வாதி வழக்குரையில் கோரியுள்ள உறவு நிலைகள் குறித்து வாதியே ஆவணங்கள் வாயிலாக நிரூபிக்க

கடமைப்பட்டுள்ளார். வாதி ஆவண எண்.3221/2017 சம்பந்தமாக 4ம் பிரதிவாதியும் குற்ற உடந்தையாக இருந்ததாக கூறியுள்ளது வழக்கிற்காக வாதியால் கற்பனையாக கூறப்பட்டுள்ள சங்கதிகளாகும். 4ம் பிரதிவாதிக்கு வாதி தரப்பில் எவ்வித எழுத்துமூலமான அறிவிப்போ, தகவலோ தெரிவிக்காமல் வழக்குரையில் கூறியுள்ளது ஏற்கதக்கதல்ல. ஆகவே, வாதி உண்மைக்கு மாறான விவரங்களை கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை 4, 5 பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர் வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள்.

**5)** 3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலையாக்கம் செய்யப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார். 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் 4, 5 பிரதிவாதிகளை நீக்கரவு செய்ய கோரியதன் அடிப்படையில் அம்மனு அனுமதிக்கப்பட்டு, 4, 5 பிரதிவாதிகள் நீக்கரவு செய்யப்பட்டுள்ளார்கள். 2ம் பிரதிவாதிக்கு தினசரி நாளிதழ் மூலம் தகவல் தெரிவித்தும் 2ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டு தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

**6)** வாதி தரப்பில், வாதி சித்ரா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.33 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** வாதி கோரியுள்ள 21.08.2017ம் தேதியில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and Void) என்று விளம்புகை செய்தும், 2ம் பிரதிவாதியோ அவரது

அதிகாரம் பெற்ற நபர்களோ சட்டப்படியான நீதிமன்ற நடவடிக்கை இல்லாமல் வேறு எந்த வகையிலும் வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தை தடை செய்யவோ சட்ட முரணாக வெளியேற்றவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கதா? இல்லையா?

8) **தீர்வு** ;-

1. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, நிரூபண வாக்குமூலம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.33 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 15.03.1988 ம் தேதியிட்ட தமிழரசி பெயரில் உள்ள கிரய ஆவணம் எண்.409/1988 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1 ஆகவும், கடந்த 15.03.1988 ம் தேதியிட்ட தமிழரசி பெயரில் உள்ள கிரய ஆவணம் எண்.1313/1988 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 09.01.2004 ம் தேதியிட்ட தமிழரசி வாதியின் கணவர் சத்தியசீலனுக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 28.02.2014 ம் தேதியிட்ட கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட தமிழரசி இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 11.03.2014 ம் தேதியிட்ட வாதியின் கணவர் சத்தியசீலன் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் எண்.926/2014 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 19.03.2018 ம் தேதியிட்ட வாதி பெயரில் வழக்கு சொத்துக்கு செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கைகள் -2) வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 22.03.2018 ம் தேதியிட்ட வாதி பெயரில்

உள்ள மின் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 21.08.2017 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.3221/2017) மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகவும், கடந்த 31.01.2018 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி வாக்காளர் அடையாள அட்டை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.9 ஆகவும், 1 ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் போலியானது என்று வாதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் அலுவலக நகல் வா.சா.ஆ.10 ஆகவும், கடந்த 07.04.2018 ம் தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் வாதியால் கொடுக்கப்பட்ட புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்காக வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பதிவு அஞ்சல் ரசீது வா.சா.ஆ.11 ஆகவும், கடந்த 18.05.2018 ம் தேதியிட்ட மன்னார்கடி நத்தம் நிலவரித்திட்ட தனிவட்டாட்சியரால் வழக்கு சொத்துக்கு வாதிக்கு வழங்கப்பட்ட மனைவரி தோராயப்பட்டா வா.சா.ஆ.12 ஆகவும், கடந்த 28.06.2018 ம் தேதியிட்ட வழக்கு சொத்துக்கு வாதி பெயரில் உள்ள மன்னார்குடி நகராட்சி நகரளவை பதிவேடு சான்று நகல் வா.சா.ஆ.13 ஆகவும், கடந்த 27.01.2020 ம் தேதியிட்ட வழக்கு சொத்துக்கு வாதி பெயரில் செலுத்தப்பட்டுள்ள சொத்து வரி ரசீது அசல் வா.சா.ஆ.14 ஆகவும், கடந்த 11.05.2018 ம் தேதியிட்ட தினமணி நாளிதழில் வழக்கு சொத்து தொடர்பாக கடந்த 09.05.2018 ம் தேதியிட்ட வாதி வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட பொது அறிவிப்பு நகல் வா.சா.ஆ.15 ஆகவும், கடந்த 16.10.2018 ம் தேதியிட்ட தினமலர் நாளிதழில் 2 ம் பிரதிவாதிக்கு வழக்கு விசாரணை குறித்து கடந்த 12.10.2018 ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட வழக்கு அறிவிப்பு அசல் வா.சா.ஆ.16 ஆகவும், கடந்த 20.11.2018 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி

பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய கேட்டு மன்னார்குடி சார்பதிவாளருக்கு வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.17 ஆகவும், கடந்த 20.11.2018 ம் தேதியில் மன்னார்குடி சார்பதிவாளருக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கு மன்னார்குடி சார்பதிவாளரால் கடந்த 22.11.2018 ம் தேதியில் கொடுக்கப்பட்ட பதில் கடிதம் வா.சா.ஆ.18 ஆகவும், கடந்த 27.11.2018 ம் தேதியிட்ட வழக்கு சொத்திற்கான கடந்த 01.01.1987 ம் தேதி முதல் கடந்த 26.11.2018 வரையுள்ள வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.19 ஆகவும், இறந்துபோன தமிழரசி பெயரில் ஏற்படுத்தப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.20 ஆகவும், கடந்த 04.07.2019 ம் தேதியிட்ட இறந்துபோன தமிழரசி பெயரில் வாக்காளர் பட்டியல் இல்லை என்று மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலகத்தின் பொது தகவல் அலுவலரால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட மேலெழுத்து கடிதம் மற்றும் உறை வா.சா.ஆ.21 ஆகவும், கடந்த 31.01.2019 ம் தேதியிட்ட மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலதிருப்பாலக்குடி கிராமத்தின் வாக்காளர் பட்டியல் பாகம் எண்.141 (வரிசை எண்.347) இணைதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.22 ஆகவும், 2019 ம் வருடத்திற்கான மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலதிருப்பாலக்குடி கிராமத்தின் கிராம ஊராட்சி வாக்காளர் பட்டியல் பாகம் எண்.4 (வரிசை எண்.279) இணையதள பதிவிறக்கம் செய்ப்பபட்ட நகல் வா.சா.ஆ.23 ஆகவும், கடந்த 26.03.2019 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத்து பாராதீனம் ஏற்படுத்தக்கூடாது என்று மன்னார்குடி சார்பதிவாளர் மற்றும் வட்டாட்சியர் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு

கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீது மற்றும் ஒப்புகை அட்டை (எண்ணிக்கை - 4) வா.சா.ஆ.24 ஆகவும், 2017 ம் வருடத்தில் 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி அவரது கணவர் தமிழ்வாணன் பெயரில் உள்ள குடும்ப அட்டை இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.25 ஆகவும், கடந்த 19.03.2021 ம் தேதியன்று இறந்துபோன தமிழரசி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.26 ஆகவும், கடந்த 26.01.2021 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதியால் வாதி பெயரில் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட ஆணையுறுதி ஆவணம் அஞ்சல் உறை வா.சா.ஆ.27 ஆகவும், கடந்த 05.09.2005 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி கணவர் தமிழ்வாணனின் சகோதரர் செல்வராஜ் மகள் நித்யா என்பவரின் திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.28 ஆகவும், கடந்த 21.09.2005 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி கணவர் தமிழ்வாணன் தகப்பனார் இறந்துபோனதற்கான உத்திரகிரிகை பத்திரக்கை அசல் வா.சா.ஆ.29 ஆகவும், கடந்த 27.01.2014 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி - தமிழ்வாணன் ஆகியோரது மகன் சிவா என்பவரின் திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.30 ஆகவும், கடந்த 30.01.2018 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமியின் வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்க நகல் வா.சா.ஆ.31 ஆகவும், கடந்த 24.03.2025 ம் தேதியன்று அசல் வழக்கு எண்.38/2018 ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.32 ஆகவும், கடந்த 24.03.2025 ம் தேதியன்று அசல் வழக்கு எண்.38/2018 ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் வா.சா.ஆ.33 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2.** வாதியானவர் தாவா சொத்து அவரது உடமையிலும், அனுபவத்திலும் உள்ளார் என்பது குறித்தும் மேலும், 21.08.2017 தேதியில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி ல்லத்தக்கதல்ல (Null and Void) என்பதை சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கும் பொறுப்பானது வாதியைச் சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**3.** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.33 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.1 ஆவணமானது 15.03.1988 ம் தேதியன்று வைடூரியம் என்பவர் தமிழரசிக்கு தாவா சொத்தினை கிரயம் கொடுத்துள்ளார் என்பதும், மேற்கண்ட ஆவணம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.409/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 15.03.1988 ம் தேதியன்று பானுமதி என்பவர் தமிழரசிக்கு தாவா சொத்தினை கிரயம் கொடுத்துள்ளார் என்பதும், மேற்கண்ட ஆவணம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.488/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தமிழரசி என்பவர் 09.01.2004 ம் தேதியன்று சத்தியசீலன் என்பவருக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் மூலம் தாவா சொத்தினை எழுதி கொடுத்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேற்படி உயில் ஆவணம் எழுதிக்கொடுத்த தமிழரசி 07.02.2014 ம் தேதியன்று கூத்தாநல்லூர் மரக்கடை அவ்வை காலனி முகவரியில் இறந்துவிட்டார் என்பதற்கான இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.4 என்பது தெரிய வருகிறது.

**4.** வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 11.03.2014 ம் தேதியன்று சத்தியசீலன் என்பவர் வாதி சித்ராவிற்கு தாவா சொத்தை இனாம் செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதிக்கொடுத்து மேற்கண்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணமானது மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.926/2014 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதி பெயரில் வழங்கப்பட்ட சொத்து வரி ரசீதும் என்பதும், வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், மின் கட்டண ரசீது என்பதும் தெரிய வருகிறது.

**5.** வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தினை தமிழரசி என்பவர் கிரயம் வாங்கி வா.சா.ஆ.3 ஆவணமான உயில் ஆவணம் மூலம் சத்தியசீலனுக்கு எழுதி கொடுக்கப்பட்டு வா.சா.ஆ.5 ஆவணமான இனாம் செட்டில்மெண்ட் மூலம் வாதிக்கு எழுதிக்கொடுத்து வா.சா.ஆ-6 மற்றும் வா.சா.ஆ-7 சொத்து வரி ரசீது மற்றும் மின் கட்டண ரசீது மூலம் வாதியின் அனுபோகத்தில் இருந்து வருகின்ற ஆவணங்களை பொறுத்து மறுக்க வேண்டிய பொறுப்பு கொண்ட பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி மறுக்காமல் ஒருதலையாக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**6.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 21.08.2017 ம் தேதியன்று தமிழரசி என்பவர் தனபாக்கியம் என்பவருக்கு தாவா சொத்துக்களை இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி வைத்து மேற்கண்ட ஆவணம் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3221/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஏற்கனவே தாவா சொத்தினை கிரயம் பெற்ற தமிழரசி என்பவரி வா.சா.ஆ.3 ஆவணமான உயில் ஆவணம் மூலம் சத்தியசீலன் என்பவருக்கு

சொத்துக்கள் பொறுத்து எழுதி வைத்து கடந்த 07.02.2014 ம் தேதியன்று வா.சா.ஆ.4 ஆவணப்படி இறந்துவிட்டார் என்பதால் மேற்கண்ட தமிழரசி 3 ஆண்டுகள் கழித்து 21.08.2017 ம் தேதியன்று வா.சா.ஆ.8 ஆவணத்தை எழுதி கொடுத்திருக்க முடியாது என்பதால் மேற்கண்ட ஆவணம் செல்லதக்கதல்ல என்று விளம்புகை வேண்டி வாதியால் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் சங்கதிகளை பொறுத்து மறுத்து கட்சி செய்ய வேண்டிய பொறுப்பு கொண்ட பிரதிவாதியானவர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காமல் ஒருதலையாக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், மேலும், தமிழரசி இறந்து 3 ஆண்டு கழித்து மேற்கண்ட ஆவணம் எழுதப்பட்டது. மேற்கண்ட வா.சா.ஆ-8 ஆவணமானது மோசடியாக ஏற்பட்ட ஆவணம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது. ஆகவே, வாதி கோருகின்ற 21.08.2017 தேதியில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and Void) என்ற விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

**7.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.9 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 2 ம் பிரதிவாதி தனலெட்சுமியின் வாக்காளர் அடையாள அட்டை என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.10 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.8 ஆவணத்தை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டி வாதியானவர் திருவாரூர் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் மனு என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.11 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.8 ஆவணத்தை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டி வாதியின் வழக்கறிஞர் திருவாரூர் காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும்

காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் மனு என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட ஆவணம் குறித்து வாதியின் வழக்கறிஞர் 11.05.2018 ம் தேதியிட்ட தினமணி, தினசரி நாளிதழில் பொது அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பது வா.சா.ஆ-15 ஆவணம் மூலம் தெரிய வருகிறது.

**8.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.12 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 18.05.2018 ம் தேதியன்று தாவா சொத்து வாதியின் பெயருக்கு வழங்கப்பட்ட மனைவரி தோராய பட்டா அசல் என்பதும், வா.சா.ஆ.13 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தானது வாதியின் பெயரிலுள்ள மன்னார்குடி நகர அளவு பதிவேடு சான்று நகல் என்பதும், வா.சா.ஆ.14 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், வாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது என்பதும் தெரிய வருகிறது.

**9.** 2 ம் பிரதிவாதிக்கு வழக்கு விசாரணை குறித்து வாதியின் வழக்கறிஞர் தினமலர் நாளிதழில் பொது அறிவிப்பு அனுப்பினார் என்பது வா.சா.ஆ.16 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. வா.சா.ஆ.8 ஆவணத்தை ரத்து செய்ய வேண்டி மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பது வா.சா.ஆ.17 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. மேற்படி அறிவிப்பிற்கு சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி பதிவு துறையால் கொடுக்கப்பட்ட பதில் கடிதம் வா.சா.ஆ.18 ஆவணம் மூலம் தெரிய வருகிறது. தாவா சொத்திற்கான வில்லங்க சான்று வா.சா.ஆ.19 என்பதும், இறந்துபோன தமிழரசின் வாக்காளர் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ-20 என்பதும் தெரிய வருகிறது.

**10.** வாதியின் பெயருக்கு மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட தபால் உறை வா.சா.ஆ.21 என்பதும், வாக்காளர்

பட்டியல் பதிவிறக்கம் நகல் வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.23 என்பதும் தெரிய வருகிறது. வா.சா.ஆ.24 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்து குறித்து எந்தவித வில்லங்கமும் ஏற்படுத்தக்கூடாது என அரசு அதிகாரிகளுக்கு வாதியின் வழக்கறிஞர் அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல் என்பதும் தெரிய வருகிறது. தமிழரசியின் கணவரின் குடும்ப அட்டை நகல் வா.சா.ஆ.25 என்பதும், தமிழரசியின் வாக்காளர் அடையாள அட்டை வா.சா.ஆ.26 என்பதும் தெரிய வருகிறது.

**11.** வா.சா.ஆ.27 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 26.01.2021ம் தேதியன்று தனலெட்சுமி என்பவர் தனது சகோதரியான தமிழரசி இறந்துவிட்டார் என கொடுத்த ஆணையுறுதி ஆவணம் என்பது தெரிய வருகிறது. 2 ம் பிரதிவாதி கணவர் தமிழ்வாணனின் சகோதரர் செல்வராஜ் மகள் நித்யாவின் திருமண பத்திரிக்கை அசல் என்பது வா.சா.ஆ.28 மூலம் தெரிய வருகிறது. வா.சா.ஆ.29 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தாவா சொத்தில் வாதி அனுபோகம் செய்து வருகிறார் என்று கோபிரளயம் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று என்பதும் தெரிய வருகிறது. 2 ம் பிரதிவாதி மகனின் திருமண பத்திரிக்கை வா.சா.ஆ.30 என்பதும், 2 ம் பிரதிவாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.31 என்பதும் தெரிய வருகிறது.

**12.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.32 மற்றும் வா.சா.ஆ.33 ஆவணங்களை பரிசீலனை செய்கையில், 1, 2 பிரதிவாதிகள் வாதி, சத்தியசீலன் மற்றும் மன்னார்குடி சார்பதிவாளர் ஆகியோர் மீது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.38/2018 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட வழக்கை தொடர்ந்து நடத்த விருப்பமில்லை என்ற

குறிப்பாணையுடன் மேற்கண்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வாதி தரப்பில் மேற்கண்ட ஆவணங்கள் மூலம் தாவா சொத்தானது வாதியின் அனுபோகத்தில் இருந்து வருகிறது என்பதையும், பிரதிவாதியானர் மோசடியான இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தி இடையூறு செய்து வருகிறார் என்பதை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.33 ஆவணங்களின் அடிப்படையில் வாதியானவர் நிரூபித்துள்ளார்.

**13.** வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்தானது தமிழரசிக்கு பாத்தியப்பட்ட சொத்தாக இருந்து உயில் ஆவணம் மூலம் வாதியின் கணவருக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வாதியின் கணவரால் வாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதி கொடுக்கப்பட்டு வாதியின் அனுபோகத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என்பது வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் வாதியானவர் நிரூபித்துள்ளார். மேற்கண்ட வாதியின் அனுபோகத்தில் உள்ள சொத்தில் தமிழரசி இறந்து 3 ஆண்டுகளுக்கு பின்னர் வா.சா.ஆ.8 ஆவணமான இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்தி கொண்டதால் வாதியின் அனுபோகத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதால் வாதி கோருகின்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், மேலும், 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லதக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரமும் வாதிக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

9) முடிவாக,

1. தாவா அனுமதிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.
2. 21.08.2017 ம் தேதியில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ள மன்னார்குடி சார்பதிவக ஆவண எண்.3221/2017 செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதில்லை (Null and Void) என்று விளம்புகை செய்தும், 2 ம் பிரதிவாதியோ அவரது அதிகாரம் பெற்ற நபர்களோ சட்டப்படியான நீதிமன்ற நடவடிக்கை இல்லாமல் வேறு எந்த வகையிலும் வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தை தடை செய்யவோ சட்ட முரணாக வெளியேற்றவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.
3. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN
Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.17 17:56:29 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.

**வாதி தரப்பு சாட்சி** :-

| | |
|---|---|
| வா.சா.1 | திருமதி.சித்ரா (வாதி), க/பெ.சத்தியசீலன். |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 15.03.1988 | 15.03.1988 ம் தேதியிட்ட தமிழரசி பெயரில் உள்ள கிரய ஆவணம் எண்.409/1988 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 15.03.1988 | 15.03.1988 ம் தேதியிட்ட தமிழரசி பெயரில் உள்ள கிரய ஆவணம் எண்.1313/1988 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.3 | 09.01.2004 | 09.01.2004 ம் தேதியிட்ட தமிழரசி வாதி கணவர் சத்தியசீலனுக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் அசல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 28.02.2014 | 28.02.2014 ம் தேதியிட்ட கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையரால் வழங்கப்பட்ட தமிழரசி இறப்பு சான்றிதழ் அசல். |
| வா.சா.ஆ.5 | 11.03.2014 | 11.03.2014 ம் தேதியிட்ட வாதி கணவர் சத்தியசீலன் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் அவணம் எண்.926/2014 சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.6 | 19.03.2018 | 19.03.2018 ம் தேதியிட்ட வாதி பெயரில் வழக்கு சொத்துக்கு செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 2) |
| வா.சா.ஆ.7 | 22.03.2018 | 22.03.2018 ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது அசல். |
| வா.சா.ஆ.8 | 21.08.2017 | 21.08.2017 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவண எண்.3221/2017 மன்னார்குடி சார்பதிவக சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.9 | 30.01.2018 | 30.01.2018 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்க நகல். |
| வா.சா.ஆ.10 | -- | 1 ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் போலியானது என்று வாதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் அலுவலக நகல். |
| வா.சா.ஆ.11 | 07.04.2018 | 07.04.2018 ம் தேதியிட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் வாதியால் கொடுக்கப்பட்ட புகாருக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்காக வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பதிவு அஞ்சல் ரசீது. |
| வா.சா.ஆ.12 | 18.05.2018 | 18.05.2018 ம் தேதியிட்ட மன்னார்குடி நத்தம் நிலவரித்திட்ட தனிவட்டாட்சியரால் வழக்கு சொத்துக்கு வாதிக்கு வழங்கப்பட்ட மனைவரி தோராயப்பட்டா. |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.13 | 28.06.2018 | 28.06.2018 ம் தேதியிட்ட வழக்கு சொத்துக்கு வாதி பெயரில் உள்ள மன்னார்குடி நகராட்சி நகரளவை பதிவேடு சான்று நகல். |
| வா.சா.ஆ.14 | 27.01.2020 | 27.01.2020 ம் தேதியிட்ட வழக்கு சொத்துக்கு வாதி பெயரில் செலுத்தப்பட்டுள்ள சொத்து வரி ரசீது அசல். |
| வா.சா.ஆ.15 | 11.05.2018 | 11.05.2018 ம் தேதியிட்ட தினமணி நாளிதழில் வழக்கு சொத்து தொடர்பாக 09.05.2018 ம் தேதியிட்டு வாதி வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட பொது அறிவிப்பு அசல். |
| வா.சா.ஆ.16 | 16.10.2018 | 16.10.2018 ம் தேதியிட்ட தினமலர் நாளிதழில் 2 ம் பிரதிவாதிக்கு வழக்கு விசாரணை குறித்து 12.10.2018 ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட வழக்கு அறிவிப்பு அசல். |
| வா.சா.ஆ.17 | 20.11.2018 | 20.11.2018 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கேட்டு மன்னார்குடி சார்பதிவாளருக்கு வழக்கறிஞர் மூலமாக கொடுக்கப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.18 | 20.11.2018 | 20.11.2018 ம் தேதியில் மன்னார்குடி சார்பதிவாளருக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கு மன்னார்குடி சார்பதிவாளரால் 22.11.2018 ம் தேதியில் கொடுக்கப்பட்ட பதில் கடிதம். |
| வா.சா.ஆ.19 | 27.11.2018 | 27.11.2018 ம் தேதியிட்ட வழக்கு சொத்திற்கான 01.01.1987 முதல் 26.11.2018 வரையுள்ள வில்லங்க சான்று நகல். |
| வா.சா.ஆ.20 | -- | இறந்துபோன தமிழரசி பெயரில் ஏற்படுத்தப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.21 | 04.07.2019 | 04.07.2019 ம் தேதியிட்ட இறந்துபோன தமிழரசி பெயரில் வாக்காளர் பட்டியல் இல்லை என்று மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலகத்தின் பொது தகவல் அலுவலரால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட மேலெழுத்து கடிதம் உறை. |
| வா.சா.ஆ.22 | 31.01.2019 | 31.01.2019 ம் தேதியிட்ட மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலதிருப்பாலக்குடி கிராமத்தின் வாக்காளர் பட்டியல் பாகம் எண்.141 (வரிசை எண்.347) இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.23 | -- | 2019 ம் வருடத்திற்கான மன்னார்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலதிருப்பாலக்குடி கிராமத்தின் கிராம ஊராட்சி வாக்காளர் பட்டியல் பாகம் எண்.4 (வரிசை எண்.279) இணையதள பதிவிறக்கம் செய்ய்பபட்ட நகல். |
| வா.சா.ஆ.24 | 26.03.2019 | 26.03.2019 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத்து பாராதீனம் ஏற்படுத்தக்கூடாது என்று மன்னார்குடி சார்பதிவாளர் மற்றும் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சல் ரசீது மற்றும் ஒப்புகை அட்டை ( எண்ணிக்கை - 4). |
| வா.சா.ஆ.25 | -- | 2017 ம் வருடத்தில் 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி அவரது கணவர் தமிழ்வாணன் பெயரில் உள்ள குடும்ப அட்டை இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.26 | 19.03.2021 | இறந்துபோன தமிழரசி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.27 | 26.01.2021 | 26.01.2021 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதியால் வாதி பெயரில் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட ஆணையுறுதி ஆவணம் அஞ்சல் உறை. |
| வா.சா.ஆ.28 | 05.09.2005 | 05.09.2005 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி கணவர் தமிழ்வாணனின் சகோதரர் செல்வராஜ் மகள் நித்யா என்பவரின் திருமண அழைப்பிதழ் அசல். |
| வா.சா.ஆ.29 | 21.09.2005 | 21.09.2005 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி கணவர் தமிழ்வாணன் தகப்பனார் இறந்து போனதற்கான உத்திரகிரிகை பத்திரிக்கை அசல். |
| வா.சா.ஆ.30 | 27.01.2014 | 27.01.2014 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமி - தமிழ்வாணன் ஆகியோரது மகன் சிவா என்பவரின் திருமண அழைப்பிதழ் அசல். |
| வா.சா.ஆ.31 | 30.01.2018 | 30.01.2018 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி தனலெட்சுமியின் வாக்காளர் அடையாள அட்டை இணையதள பதிவிறக்க நகல். |
| வா.சா.ஆ.32 | 24.03.2025 | அசல் வழக்கு எண்.38/2018-ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.33 | 24.03.2025 | அசல் வழக்கு எண்.38/2018 ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல். |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:- இல்லை.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.04.17 17:56:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.